தென்காசி நகராட்சி

30.03.2012 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் மன்றப்பொருள்

மன்றப்பொருள்: 1

இந்நகராட்சி பணியாளர்கள் மற்றும் ஆணையாளர் அலுவலகப்பணி நிமித்தமாக வெளியூர் சென்று வருவதற்கான பயணப்படி 2010–2011ம் ஆண்டு முதல் அரசு விதிகளுக்கு உட்பட்டு நகராட்சி ஆணையாளர் ஏற்பளிப்பதற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு 1 ஒப்புதல் அளிக்கலாம்.

மன்றப்பொருள்: 2

தென்காசி நகராட்சிப் பகுதிகளில் 62.00 கி.மீ நீளத்திற்கு குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு அதன் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பகிர்மானக் குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி கோரி ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான ஒப்பந்தக் காலம் 31.03.2012ல் முடிவடைகிறது. தற்போது சங்கரன்கோவில் சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெற இருப்பதால் (16.02.2012 முதல் 25.03.2012 முடிய) தேர்தல் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவோ, மன்றத்தில் பொருள் வைக்கவோ முடியாத நிலை உள்ளது. எனவே இந்நகர்மன்ற தீர்மானம் எண். 99 நாள். 30.06.2011ம் தேதியில் திரு. எஸ்.முத்து சுப்பிரமணியன், ஒப்பந்தக்காரருக்கு மேற்படி பணியினை செய்ய 2011–12ம் ஆண்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. அதன்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏப்ரல் மற்றும் மே 2012 ஆகிய 2 மாதங்களுக்கு திரு. எஸ். முத்துசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர் மூலம் மேற்படி பணியினை செய்யவும், அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.34000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் திரு. எஸ். முத்துசுப்பிரமணியன், ஒப்பந்தக்காரர் மேற்படி பணியினை செய்ய மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.
3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

மன்றப்பொருள்: 3

தென்காசி நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் ஊர்க்காடு, மன்னார் கோவில், திருமலையப்பபுரம், மாதாபுரம் (ஆசிர்வாதபுரம்) மற்றும் தென்காசி வாய்க்கால்பாலம் ஆகிய 5 இடங்களில் உள்ள நீருந்து நிலையங்கள் மூலமாக குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 5 இடங்களிலுள்ள மின்மோட்டார்களை இயக்கவும், பராமரிக்கவும், இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் மூலம் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2012ல் முடிவடைகிறது. தற்போது சங்கரன்கோவில் சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெற இருப்பதால் (16.02.2012 முதல் 25.03.2012 முடிய) தேர்தல் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவோ, மன்றத்தில் பொருள் வைக்கவோ முடியாத நிலை உள்ளது. எனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 100 நாள். 30.06.2011ம் தேதியில் திரு.எஸ்.சுடலைமுத்து என்பவருக்கு 2011–12ம் ஆண்டில் மேற்படி பணியினை செய்ய ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஏப்ரல் மற்றும் மே 2012 ஆகிய 2 மாதங்களுக்கு திரு. எஸ். சுடலைமுத்து ஒப்பந்தக்காரர் மூலம் மேற்படி பணியினை செய்யவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.1.60 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

2 ஏற்கனவே கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தில் திரு. எஸ். சுடலைமுத்து, ஒப்பந்தக்காரர் மேற்படி பணியினை செய்ய மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.

மன்றப்பொருள்: 4

தென்காசி நகராட்சிப் பகுதிகளில் உள்ள 33 வார்டுகளுக்கும் குடிநீர் விநியோகமானது 21(Zone) பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பல அளவு விட்டமுள்ள குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் பகிர்மானக் குழாய்களில் அமைக்கப்பட்டுள்ள பல்வேறு வால்வுகளை இயக்கி 21 (Zone) பிரிவுகளுக்கும் சீராக குடிநீர் விநியோகம் செய்ய போதுமான வால்வு திருப்புநர்கள் இந்நகராட்சியில் இல்லாத காரணத்தினால் மேற்படி வால்வுகளை இயக்கி பராமரிக்கும் பணியானது 4 பணியாளர்களைக் கொண்டு ஒப்பந்த அடிப்படையில் தனியார் மூலம் செய்யப்படுகிறது. இப்பணிக்கான ஒப்பந்தக்காலம் 31.03.2012ல் முடிவடைகிறது. தற்போது சங்கரன்கோவில் சட்டமன்ற இடைத்தேர்தல் நடைபெற இருப்பதால் (16.02.2012 முதல் 25.03.2012 முடிய) தேர்தல் விதிகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரவோ, மன்றத்தில் பொருள் வைக்கவோ முடியாத நிலை உள்ளது. எனவே இந்நகர்மன்ற தீர்மான எண். 105 நாள். 30.06.2011ம் தேதியில் 2011–12ம் ஆண்டிற்கு (மார்ச் 2012 முடிய) திரு.ஜி. சோமசுந்தரம் ஒப்பந்தக்காரருக்கு மேற்படி பணியினை செய்ய மன்றத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோருவதில் காலதாமதம் ஏற்படுவதால் ஏப்ரல் மற்றும் மே 2012 ஆகிய 2 மாதங்களுக்கு திரு.ஜி.சோமசுந்தரம் ஒப்பந்தக்காரர் மூலம் 2011–12ம் ஆண்டிற்கான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தின்படி மேற்படி பணியினை செய்யவும் அதற்கான உத்தேச மதிப்பீடு ரூ.27,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

மன்றப்பொருள்: 5

இந்நகராட்சியில் கீழ்க்கண்ட மாதங்களில் நடைபெற்ற நகர்மன்ற கூட்டங்களுக்கு மன்றப் பொருட்கள் அனுப்ப போட்டோ நகல்கள் (Xerox Copies) எடுத்த வகைக்கு கீழ்க்கண்ட பட்டியல்கள் வந்துள்ளது.

1) நவம்பர் 11 மாதம்	ரூ.530
2) டிசம்பர் 11 மாதம்	ரூ.530
3) சனவரி 12 மாதம்	ரூ.920
மொத்தம்	ரூ.1980

மேற்படி செலவுத் தொகை ரூ. 1,980/– ஐ வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அ.கு : மன்றம் அனுமதி வழங்கலாம்

மன்றப்பொருள் :6

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.2015முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ
1	இந்நகராட்சிக்கு சொந்தமான சந்தையில் புதன்கிழமை நீங்கலாக மற்ற நாட்களில் தினசரி சந்தையிலும் மேற்படி சுற்றுப்புறங்களிலும் வியாபாரம் செய்பவர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட இடம்)	1. டி.முருகேசன், கண்டமங்கலம். 2. எஸ்.ஆர்.சந்திரன் கண்டமங்கலம் 3. பி.வேம்பு 25சி/2, உச்சிமாகாளி 3ம் தெரு கீழப்புலியூர்.	2,20,000/– 2,34,000/– 2,25,000/–

அ.கு:

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது
2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. எஸ் ஆர் சந்திரன் என்பவர் ரூ.2,34,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 229871/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரி தொகை ரூ.219099/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. எஸ் ஆர் சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :7

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை கூடும் நாளான புதன்கிழமை தோறும் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் வசூல் செய்யும் உரிமம் (நகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட இடம்)	1. டி.முருகேசன், கண்டமங்கலம்.	81,000
		2. எஸ்.ஆர்.சந்திரன் கண்டமங்கலம்	87,300
		3. பி.வேம்பு 25சி, உச்சிமாகாளி 3ம் தெரு கீழப்புலியூர்.	82,000

அகு:

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக

திரு. எஸ் ஆர் சந்திரன் என்பவர் ரூ.87,300/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 83459/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரி தொகை ரூ.79,548/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. எஸ் ஆர் சந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :8

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஓப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை
1	தென்காசி நகராட்சி புதிய பேரூந்து நிலையத்திற்கு வரும் பேரூந்துகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்	1. எஸ்.ஆர்.சந்திரன் கண்டமங்கலம் 2. ஆர். நம்பி எச்129தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி	9,71,500 9,72,000

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. ஆர். நம்பி என்பவர் ரூ.9,72,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 9,70,862/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.9,25,364/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :9

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	தென்காசி நகராட்சிப் பகுதியில் சாலை ஓரங்களில் வைத்து வியாபாரம் செய்யும் சிறிய தற்காலிக கடைகளில் இருந்தும், தெருக்களில் தலைச் சுமையாகவும் சைக்கிள்களிலும் மற்றும் வண்டிகளிலும் வைத்து வியாபாரம் செய்பவர்களிடம் இருந்தும் கட்டணம் வசூல் செய்யும் உரிமம்.	1. பி.வேம்பு 25சி/2, உச்சிமாகாளி 3ம் தெரு கீழப்புலியூர்.	–––
		2. எஸ்.ஆர்.சந்திரன் கண்டமங்கலம்	–––
		3. வி. உச்சிமகாளி, உச்சிமகாளி 4ம் தெரு, கீழப்புலியூர்.	2,35,000

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. வி. உச்சிமகாளி என்பவர் ரூ.2,35,000/-க்கு ஏலம் கேட்டுள்ளார். . மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 2,45,306/-ஐ விட குறைவாகவும் கடந்த மூன்று ஆண்டு சராசரி தொகை ரூ.2,34,000/- ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே மூன்று ஆண்டு சராசரி தொகையை விட கூடுதலாக உள்ளதால் உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. வி. உச்சிமகாளி என்பவரின் ஏலக்கேள்வி மீது மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :10

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ
1	நகராட்சி பழைய பேரூந்து நிலையத்தில் (தற்போது பேரூந்து நிறுத்துமிடம்) நவீன குளியலறை மற்றும் கழிப்பிட கட்டணம் வசூலிக்கும் உரிமம்	1) பி.முகம்மது இஸ்மாயில், 74, எஸ்.கே.பி தெரு, தென்காசி	4,17,770
		2) ஏ. ஷேக்பரீத், 63, நடுப்பேட்டை தெரு, தென்காசி.	3,00,000
		3) வி.வேம்பு 106/25சி/2, உச்சிமாகாளி 3ம் தெரு, கீழப்புலியூர்.	6,11,000
		4) எஸ்.பாலசுப்பிரமணியன், 359/3ஜி, உச்சிமாகாளி 1ம் தெரு, தென்காசி.	––
		5) எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம்	––
		6) வி. உச்சிமகாளி, உச்சிமகாளி 4ம் தெரு, கீழப்புலியூர்.	3,63,000

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது
2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. வி. வேம்பு என்பவர் ரூ.6,11,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 3,01,865/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.2,87,718/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. வி. வேம்பு என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :11

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	பரதன் தியேட்டர் வடபுறம் முன்சீப் கோர்ட் பின்புறம் உள்ள காலி இடத்தில் சைக்கிள் ஸ்டாண்ட் நிறுவி கட்டணம் வசூல் செய்யும் உரிமம்	1) பழனி பாஸ்கர், 825, மலையான் தெரு, தென்காசி	25,000
		2) எம். முத்துசாமி, 825, மலையான் தெரு, தென்காசி.	23,000
		3) எம். முகம்மது காசீம், 41, தெற்கு கடையத் தெரு, 3ம் தெரு, கீழப்புலியூர்.	32,999
		4) எஸ்.பாலசுப்பிரமணியன், 359/3ஜி, உச்சிமாகாளி 1ம் தெரு, தென்காசி.	20,300
		5) எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம்	––
		6) எஸ். சரவணன், 87/13பி2, சம்பா தெரு, தென்காசி.	20,200

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு.எம். முகம்மது காசீம் என்பவர் ரூ.32,999/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 20,507/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரி தொகை ரூ.19,546/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. எம். முகம்மது காசீம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :12

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	புதிய பேரூந்து நிலையத்தில் எடை பார்க்கும் இயந்திரம் நிறுவி கட்டணம் வசூல் செய்யும் உரிமம்	1. டி.முருகேசன், கண்டமங்கலம்	16,400
		2. எஸ்.ஆர்.சந்திரன், கண்டமங்கலம்	17,280

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. எஸ்.ஆர்.சந்திரன், என்பவர் ரூ.17,280/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 17,111/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.16,309/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர்.சந்திரன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :13

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தென்காசி நகராட்சி எல்லைக்குள் உள்ள பலன் தரும் மரங்களில் மகசூலை அனுபவிக்கும் உரிமம்.	1. டி.முருகேசன், கண்டமங்கலம்	4,900
		2. எஸ்.ஆர்.சந்திரன், கண்டமங்கலம்	5,400

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. எஸ்.ஆர்.சந்திரன், என்பவர் ரூ.5,400/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 5,105/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.4,866/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர்.சந்திரன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :14

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
12	புதிய பேரூந்து நிலையத்தில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	1. எஸ்.ஆர்.சந்திரன், கண்டமங்கலம்.	57,000
		2. ஆர். நம்பி எச்129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி	58,000
		3. எம். பழனிபாஸ்கர், 825, மலையான் தெரு, தென்காசி	90,000
		4. எம். முத்துச்சாமி, 825, மலையான் தெரு, தென்காசி	
		5) எஸ். சரவணன், 87/13பி2, சம்பா தெரு, தென்காசி.	80,000
			––

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. எம். பழனிபாஸ்கர்,என்பவர் ரூ.90,000/–க்கு ஏலம் கேட்டுள்ளார். . மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 53,030/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.50,545/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. எம். பழனிபாஸ்கர், என்பவரின் ஏலக்கேள்வி மீது மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :15

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஓப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	புதிய பேரூந்து நிலையத்தில் ஆட்டோ நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	1. எஸ்.ஆர்.சந்திரன், கண்டமங்கலம்.	4,800
		2. ஆர். நம்பி எச்129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி	4,900

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. ஆர். நம்பி, என்பவர் ரூ.4,900/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 4,708/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரி தொகை ரூ.4,487/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :16

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ
1	புதிய பேரூந்து நிலையத்தில் வேன் மற்றும் டாக்ஸி ஸ்டாண்ட் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	1. எஸ்.ஆர்.சந்திரன், கண்டமங்கலம்.	4,800
		2. ஆர். நம்பி எச்129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி	4,900

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. ஆர். நம்பி, என்பவர் ரூ.4,900/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 4,708/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரி தொகை ரூ.4,487/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :17

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ
1	புதிய பேரூந்து நிலையத்தில் கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	1. எஸ்.ஆர்.சந்திரன், கண்டமங்கலம்.	3,43,800
		2. டி. முருகேசன், கண்டமங்கலம்.	3,28,000

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. எஸ்.ஆர். சந்திரன், என்பவர் ரூ.3,43,800/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 3,43,319/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.3,27,230/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர். சந்திரன், என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :18

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	தற்போதைய பேரூந்து நிறுத்தம் (பழைய பேரூந்து நிலையம்) ஆட்டோ நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	1. எஸ். முருகன், 35 ஏ/1ஏ, செங்குந்தர் புதுத் தெரு தென்காசி.	16,200
		2. பி. சங்கர், 321, களக்கோடித் தெரு, தென்காசி	16,300

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. பி. சங்கர்,என்பவர் ரூ. 16,300/–க்கு ஏலம் கேட்டுள்ளார். . மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 16,262/-ஐ விட கூடுதலாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.15,500/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது எனவே உயர்ந்த ஏலக்கேள்வி கேட்டுள்ள திரு. பி. சங்கர், என்பவரின் ஏலக்கேள்வி மீது மன்றம் முடிவு செய்யலாம்.

மன்றப்பொருள் :19

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	புதிய பேரூந்து நிலையத்தில் கட்டண பொருட்கள் பாதுகாப்பு அறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்	1. ராமசுப்பு எல்147, டி.என்.ஹெச்.பி காலனி, தென்காசி.	8,800
		2. ஆர். நம்பி எச்129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி	8,850

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு.ஆர்.நம்பி என்பவர் ரூ. 8,850/-க்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 9,206/-ஐ விட குறைவாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரி தொகை ரூ.8,775/-ஐ விட கூடுதலாகவும் உள்ளது ஆனால் ஆர். நம்பி எச்129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி என்பவர் 29.03.2012ம் தேதிய விண்ணப்பத்தில் ரூ.9,300/–க்கு மேற்படி குத்தகை உரிமத்தினை அனுபவித்துக் கொள்ள விருப்பம் தெரிவித்துள்ளார். அதன்படி உயர்ந்த கேள்வியாக ரூ.9,300/– க்கு விருப்பம் தெரிவித்துள்ள ஆர். நம்பி எச்129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி என்பவரின் கேள்வியினை மன்றம் முடிவு செய்யலாம்

மன்றப்பொருள் :20

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடத்தப்பட்டதில் பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியவர் பெயர் முகவரி	ஏலம் / ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.
1	ஆடு மற்றும் மாடு அடிக்கும் மனை	1. எம். இஸ்மத் 313, மலையான் தெரு புதுப்பள்ளி பின்புறம் தென்காசி.	67,000
		2. எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம்.	66,500

அ.கு

1) இந்நகர்மன்ற தீர்மான எண். 66 நாள்.31.01.2012 ல் 01.04.2012 முதல் 31.03.2015முடிய அனுபவித்துக் கொள்ள ஒப்புதல் வழங்கியுள்ளது

2) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. எம். இஸ்மத் என்பவர் ரூ. 67,000/–க்கு ஏலம் கேட்டுள்ளார். . மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ. 85,995/-ஐ விட குறைவாகவும், கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.81,965/-ஐ விட குறைவாகவும் உள்ளதால் மறு ஏலம் விட மன்றத்தின் முடிவிற்கு.

மன்றப்பொருள் :21

இந்நகராட்சிக்குப் பாத்தியப்பட்டதும் அனுபவத்தில் உள்ளதுமான கீழ்க்கண்ட குத்தகை இனத்தை இந்நகர்மன்ற தீர்மான எண். 66, நாள். 31.01.2012ல் ஒப்புதல் வழங்கியதின் அடிப்படையில் 01.04.2012 முதல் 31.03.20115 முடிய உள்ள 3 ஆண்டு காலத்திற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமைக்கு 29.03.2012ல் பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேற்படி பொதுஏலத்தில் கீழ்க்கண்டவாறு ஒரு ஆண்டிற்கான ஏலநடவடிக்கை மீது மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது. (ந.க.எண்.543/2012/அ2)

வ. எண்	குத்தகை இனம் விபரம்	ஏலதாரர் பெயர் முகவரி	ஏலத்தொகை ரூ
1	நகராட்சிக்குப் பாத்தியப்பட்ட தலைமை தபால் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள நவீன குளியல் அறைக் கட்டணம் மற்றும் கழிப்பிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.	பி.வேம்பு, 25சி, உச்சிமாகாளி 3ம் தெரு, தென்காசி	1,65,000

அ.கு

1) மேற்படி குத்தகை இனத்திற்கு உயர்ந்த ஏலக்கேள்வியாக திரு. வி. வேம்பு என்பவர் ரூ.1,65,000/-க்கு ஏலம் கேட்டுள்ளார். மேற்படி தொகையானது முந்தைய ஆண்டு ஏலத் தொகை ரூ.2,98,447/-ஐ விட குறைவாகவும் கடந்த மூன்று ஆண்டு சராரரி தொகை ரூ.2,84,461/-ஐ விட குறைவாகவும் உள்ளது மேற்படி கழிப்பிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் மேற்படி நபரை தவிர வேறு யாரும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கொடுக்க முன்வரவில்லை என்ற விபரம் மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

மன்றப்பொருள் :22

தென்காசி நகராட்சிப் பகுதிகளுக்கு தாமிரபரணி குடிநீர் திட்டத்தின் கீழ் ஊர்க்காடு நீருந்து நிலையம் மூலமாக குடிநீர் ஏற்றப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது வழியோர நீர்உந்து நிலையங்கள் (மன்னார் கோவில், திருமலையப்பபுரம், மாதாபுரம் மற்றும் தென்காசி) நான்கு இடத்திலும் நாள் ஒன்றுக்கு சுமார் 9 மணி நேரம் முதல் 14 மணி நேரம் வரை அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. மேற்படி நான்கு இடத்திலும் ஜெனரேட்டர் பொருத்தப்பட்டு இயங்கப்பட்டு வருகிறது. தற்பொழுது அதிக அளவில் மின்தடையின் காரணமாக ஜெனரேட்டர் பயன்படுத்தி வருவதால் இரண்டு எண்ணம் (125 கேவிஏ) அடிக்கடி பழுதடைந்து விடுவதால் தென்காசி நகர்ப்புற மக்களுக்கு சீரான குடிநீர் வழங்க இயலவில்லை. இதனால் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்களால் அடிக்கடி புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேற்படி ஜெனரேட்டர் அடிக்கடி பழுதடைவதன் காரணமாக நகர்ப்புற மக்களுக்கு 5 நாட்கள் முதல் 6 நாட்களுக்கு ஒருமுறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதனால் மேற்படி பொதுமக்கள் நலனை கருத்திற் கொண்டும் குடிநீர் அவசர அவசியம் கருதியும் கூடுதலாக (125 கேவிஏ) மாற்று ஜெனரேட்டர் வாங்க உத்தேச செலவு ரூ.9.90 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1) **மன்றம் அனுமதிக்கலாம்.**
2) **மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புக் கொள்ளலாம்.**

தலைவர்,
தென்காசி நகர்மன்றம்.

தென்காசி நகராட்சி

30.03.2012 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டத்தின் தீர்மான நகல்

வ.எண்	மன்றப்பொருள் எண்	தீர்மான எண்	தீர்மானம்
		109	பிப்ரவரி 22 –24ம் தேதி நக்கீரன் நாளிதழில் வரப்பெற்ற செய்தியின்படி திரு. சரத்குமார் எம்.எல்.ஏ., மீது கொலை மிரட்டல் விடுத்த உண்மைக் குற்றவாளியை விரைவில் கண்டுபிடிக்க தென்காசி காவல்துறையினரை அனைத்து நகர்மன்ற உறுப்பினர்களால் ஏகமனதாக கேட்டுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.
1	1	110	அனுமதிக்கப்பட்டது
2	2	111	அனுமதிக்கப்பட்டது
3	3	112	அனுமதிக்கப்பட்டது
4	4	113	அனுமதிக்கப்பட்டது
5	5	114	அனுமதிக்கப்பட்டது
6	6	115	உயர்ந்த ஓப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,34,000/– கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம் என்பவரின் ஓப்பந்தப்புள்ளி ஓப்புக் கொள்ளப்பட்டது.
7	7	116	உயர்ந்த ஓப்பந்தப்புள்ளி தொகை ரூ.87,300/– கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம் என்பவரின் ஓப்பந்தப்புள்ளி ஓப்புக் கொள்ளப்பட்டது.
8	8	117	உயர்ந்த ஓப்பந்தப்புள்ளி தொகை ரூ.9,72,000/– கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி, எச் 129, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி என்பவரின் ஓப்பந்தப்புள்ளி ஓப்புக் கொள்ளப்பட்டது.

9	9	118	மறு ஒப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.
10	10	119	உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.6,11,000/– கொடுத்துள்ள திரு.வி. வேம்பு 106/25சி/2 , உச்சிமாகாளி 3ம் தெரு, கீழப்புலியூர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஒப்புக் கொள்ளப்பட்டது.
11	11	120	திரு. முகம்மது இஸ்மாயில் என்பவர் மறு ஏலம் கேட்ட ரூ.33,500/– தொகை செலுத்தியுள்ளதால் மறு ஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.
12	12	121	உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.17,280/– கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம் என்பவரின் ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டது.
13	13	122	உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.5,400/– கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம் என்பவரின் ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டது.
14	14	123	மறு ஏலம் கேட்க திரு. ஆர். நம்பி என்பவர் ரூ.1,20,500/– தொகையை செலுத்தி உள்ளதால் மறுஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.
15	15	124	உயர்ந்த ஏலக்கழிவு தொகை ரூ.4,900/– கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி, எச் 129 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி என்பவரின் ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டது.
16	16	125	உயர்ந்த ஏலக்கழிவு தொகை ரூ.4,900/– கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி, எச் 129 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி என்பவரின் ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டது.
17	17	126	உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ3,43,800/– கொடுத்துள்ள திரு. எஸ்.ஆர். சந்திரன், கண்டமங்கலம் என்பவரின் ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டது.

18	18	127	உயர்ந்த ஏலக்கேள்வி தொகை ரூ.16,300/– கொடுத்துள்ள திரு. பி. சங்கர், 321, களக்கோடித் தெரு , தென்காசி என்பவரின் ஏலக்கேள்வி ஓப்புக் கொள்ளப்பட்டது.
19	19	128	உயர்ந்த ஏலக்கேள்வித் தொகை ரூ.9,300/– கொடுத்துள்ள திரு. ஆர். நம்பி, எச் 129 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தென்காசி என்பவரின் ஏலக்கேள்வி ஓப்புக் கொள்ளப்பட்டது.
20	20	129	மறு ஓப்பந்தப்புள்ளி கோர தீர்மானிக்கப்பட்டது.
21	21	130	பராமரிப்பு பணி செய்து முடிந்த பின் மறு ஓப்பந்தப்புள்ளி கோர மன்றம் தீர்மானித்துள்ளது.
22	22	131	அனுமதிக்கப்பட்டது

(ஓம்)எஸ்.பானு

தலைவர்,

தென்காசி நகர்மன்றம்.